# 9 – 10TH STD பொதுத்தமிழ் (புதிய பாடத்திட்டம்)

1. யார் முதன்முதலில் தமிழ், தெலுங்கு – கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஒரே இனமாக கருதி தென்னிந்திய மொழிகள் என பெயரிட்டார்?
   a. கால்டுவெல் b. வில்லியம் ஜோன்ஸ் c. ஈராஸ் பாதிரியார்
   d. பிரான்சிஸ் எல்லிஸ் e. விடைதெரியவில்லை

2. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாததைத் தேர்ந்தெடு.
   a. கொரகா b. கதபா c. மண்டா
   d. கோயா e. விடைதெரியவில்லை

3. "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின்
   புன்னகையையும் புரிந்துகொள்ள
   அகராதிகள் தேவைப்படுவதில்லை பாடலும்
   அப்படித்தான்!" என்று கூறியவர்.
   a. மு. மேத்தா b. ஈரோடு தமிழன்பன் c. அப்துல் ரகுமான்
   d. ஞானக்கூத்தன் e. விடைதெரியவில்லை

4. பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு.
   a. துறை b. சிந்து c. தாழிசை d. விருத்தம் e. விடைதெரியவில்லை

5. "நீந்தியது" என்ற சொல்லில் வரும் விகுதி?
   a. ஒன்றன்பால் வினைமுற்று விகுதி b. பலவின்பால் வினைமுற்று விகுதி
   c. தன்மை ஒருமை வினைமுற்று விகுதி d. தன்மை பன்மை வினைமுற்று விகுதி
   e. விடைதெரியவில்லை

6. பகுபதம் எத்தனை வகைப்படும்?
   a. 2 b. 3 c. 4 d. 6 e. விடைதெரியவில்லை

7. "காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! – எந்தக்
   காலமும் நிலையாய் இருப்பது தமிழே!"
   இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்.
   a. முரண், எதுகை இரட்டைத்தொடை b. இயைபு, அளபடை, செந்தொடை
   c. மோனை, எதுகை இயைபு d. மோனை, முரண் அந்தாதி
   e. விடைதெரியவில்லை

8. பொருத்துக.
   A. ஆழிக்கிணறு 1. சரளை நிலத்தில் தோண்டி கல், செங்கற்களால் அகச்சுவர் கட்டிய கிணறு

B. உறைக்கிணறு 2. மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு.

C. கூட்டுக்கிணறு 3. கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு

D. பூட்டைக்கிணறு 4. கமலை நீர் பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 2 | 1 | 4 |
| b. | 4 | 2 | 1 | 3 |
| c. | 2 | 1 | 4 | 3 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடைதெரியவில்லை

9. கவிஞர் தமிழ் ஒளி படைப்புகளுள் தவறானது எது?
a. கண்ணப்பன் கிளைகள் b. குவிப்பட்டி c. தமிழர் சமுதாயம்
d. உயிர்வகை e. விடைதெரியவில்லை

10. பொருள் தருக : விசனம்
a. மனம் b. மணம் c. கவலை d. மேல் e. விடைதெரியவில்லை

11. “சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்ந்துக
காலிரும் பகடு போக்கம் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்”
இதில் <u>பகடு</u> என்தின் பொருள் தருக.
a. எருமைக்கடா b. இளமையான வாளைமீன் c. ஆச்சாமரம்
d. பருத்தபனைமரம் e. விடைதெரியவில்லை

12. சேக்கிழாரை “பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ” என்று பாராட்டியவர் யார்?
a. ஆறுமுகநாவலர் b. மீனாட்சி சுந்தரனார் c. பாரதியார்
d. பெருஞ்சித்திரனார் e. விடைதெரியவில்லை

13. இலக்கண குறிப்பு தருக. “விரிமலர்”
a. வினைத்தொகை b. பண்புத்தொகை c. உரிச்சொல் தொடர்
d. வினைமுற்று e. விடைதெரியவில்லை

14. “உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றநிலை முனியாது கற்றல் நன்றே!
பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
a. அகநானூறு b. புறநானூறு c. பரிபாடல
d. கலித்தொகை e. விடைதெரியவில்லை

15. “சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன்” போன்ற சிறுகதைத் தொகுப்புகளை எழுதியவர்.
a. கந்தர்வன் b. வைரமுத்து c. புலவர்குழந்தை
d. அப்துல் ரகுமான் e. விடைதெரியவில்லை

APOLLO STUDY CENTRE

16. தவறான இணையை கண்டறிக.
a. தண்ணீர் தண்ணீர் - கந்தர்வன்
b. தண்ணீர் தேசம் - வைரமுத்து
c. வாய்க்கால் மீன்கள் - வெ. இறையன்பு
d. மழைக்காலமும் குயிலோசையும் - மா. கிருஷ்ணன்
e. விடைதெரியவில்லை

17. பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காட்டியம் என அழைக்கப்படுவது.
a. சிலப்பதிகாரம் b. மணிமேகலை c. பெண்ணின் பெருமை
d. சீவகசிந்தாமணி e. விடைதெரியவில்லை

18. "நன்னூற்புலவன்" என பாராட்டப்பட்டவர்.
a. இளங்கோவடிகள் b. சீத்தலைசாத்தனார் c. திருத்தக்கதேவர்
d. புகழேந்திபுலவர் e. விடைதெரியவில்லை

19. இலக்கணக்குறிப்பு தருக. தாழ்பூந்துறை
a. பண்புத்தொகை b. உரிச்சொற்தொடர் c. வினைமுற்று
d. வினைத்தொகை e. விடைதெரியவில்லை

20. தவறான தொடரைக் காண்க.
a. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.
b. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகாது.
c. இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
d. சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.
e. விடைதெரியவில்லை

21. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.
a. தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.
b. தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.
c. தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.
d. தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.
e. விடைதெரியவில்லை

22. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" - இக்குறளில் பயின்று வரும் அணியைக் காண்.
a. உவமையணி b. ஏகதேச உருவக அணி c. தன்மையணி
d. வஞ்சப்புகழ்ச்சி அணி e. விடைதெரியவில்லை

23. "தொல்லியல் நோக்கில் சங்க காலம்"
என்ற நூலின் ஆசிரியர் யார்?
a. அ. தட்சணாமூர்த்தி b. கா. ராஜன் c. க. வித்யானந்தன்
d. க. ரத்னம் e. விடைதெரியவில்லை

24. திருக்குறள் உரைகளில் யாருடைய உரை சிறந்தது?
a. தருமர் b. மணக்குடவர் c. நச்சர்
d. பரிமேலழகர் e. விடைதெரியவில்லை

APOLLO STUDY CENTRE

25. திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு.
a. 1821 b. 1812 c. 1802 d. 1902 e. விடைதெரியவில்லை

26. "அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்" - என்று கூறியவர் யார்?
a. வைரமுத்து b. அப்துல்ரகுமான் c. ஈரோடுதமிழன்பன்
d. சிற்பி e. விடைதெரியவில்லை

27. பொருத்துக.
A. ஓரறிவு 1. சிப்பி, நத்தை
B. ஈரறிவு 2. கரையான், எறும்பு
C. மூவறிவு 3. புல், மரம்
D. நான்கறிவு 4. புறவை
E. ஐந்தறிவு 5. நண்டு, தும்பி

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 4 | 5 | 2 | 3 | 1 |
| b. | 3 | 1 | 2 | 5 | 4 |
| c. | 5 | 2 | 4 | 3 | 1 |
| d. | 3 | 1 | 4 | 2 | 5 |

e. விடைதெரியவில்லை

28. தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்கள் மற்றும் இயல்களின் எண்ணிக்கை.
a. 133, 1380 b. 6, 52 c. 3, 27 d. 9, 107 e. விடைதெரியவில்லை

29. இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை
a. அப்துல்கலாம் b. மயில்சாமி அண்ணாத்துரை c. விக்ரம்சாராய்
d. சிவன் e. விடைதெரியவில்லை

30. தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்
a. முத்துலெட்சுமி b. பண்டித ரமாபாய் c. ஐடாஸ் சோபியா ஸ்கூட்டர்
d. சாவித்ரிபாய் பூலே e. விடைதெரியவில்லை

31. பாரதிதாசன் எந்த நூலுக்கு சாகித்ய அகாதெமி விருது பெற்றார்?
a. பாண்டியன் பரிசு b. இருண்டவீடு c. அழகின் சிரிப்பு
d. பிசிராந்தையார் e. விடைதெரியவில்லை

32. "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா"
என்று பாடியவர் யார்?
a. பாரதியார் b. பாரதிதாசன் c. வாணிதாசன்
d. கவிமணி தேசிய விநாயகம் e. விடைதெரியவில்லை

33. பொருந்தாததைத் தேர்ந்தெடு சிறுபஞ்சமூலம்
a. சிறுமல்லி b. பெருமல்லி c. சிறுவழுதுணை
d. பெருவழுதுணை e. விடைதெரியவில்லை

34. “தென்னத்துப் பெர்னாட்ஷா” என்று அழைக்கப்பட்டவர்.
a. கல்கி b. பெரியார் c. அண்ணா d. பாரதியார் e. விடைதெரியவில்லை

35. க, இய என்பன ______.
a. தொழிற்பெயர் விகுதிகள் b. வியங்கோள் விகுதிகள்
c. பன்மை விகுதிகள் d. வினையெச்ச விகுதிகள்
e. விடைதெரியவில்லை

36. பொருத்தமான விடையைத் தேர்க.

A. சிறுபஞ்சமூலம் — 1. காப்பிய இலக்கியம்
B. குடும்பவிளக்கு — 2. சங்க இலக்கியம்
C. சீவகசிந்தாமணி — 3. அற இலக்கியம்
D. குறுந்தொகை — 4. தற்கால இலக்கியம்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 2 | 3 | 1 | 4 |
| c. | 3 | 1 | 4 | 2 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடைதெரியவில்லை

37. யாருடைய காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள் எழுப்பப்பட்டன?
a. பல்லவர்கள் b. சோழர்கள் c. பாண்டியர்கள்
d. விஜயநகர மன்னர்கள் e. விடைதெரியவில்லை

38. “செப்புத்திருமேனிகளின் பொற்காலம்” என யாருடைய காலம் அழைக்கப்பட்டது.
a. பல்லவர்கள் b. சோழர்கள் c. பாண்டியர்கள்
d. விஜயநகர மன்னர்கள் e. விடைதெரியவில்லை

39. பொருள் தருக: <u>மைவனம்</u>
a. மலைநெல் b. குறிஞ்சிப்பறை c. இறகு
d. சந்தனம் e. விடைதெரியவில்லை

40. நாச்சியார் திருமொழி மொத்தம் எத்தனை பாடல்களைக் கொண்டது.
a. 143 b. 105 c. 155 d. 202 e. விடைதெரியவில்லை

41. பொருத்துக.

| ஆண்டு | சாகித்திய அகதெமி நூல் |
|---|---|
| A. 1996 | 1. அப்பாவின் சிநேகிதர் |
| B. 2008 | 2. மின்சாரப்பூ |
| C. 2010 | 3. சூடிய பூ சூடற்க |
| D. 2016 | 4. ஒரு சிறு இசை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 1 | 4 | 3 | 2 |
| d. | 1 | 2 | 4 | 3 |

e. விடைதெரியவில்லை

APOLLO STUDY CENTRE

42. கீழ்கண்டவை எந்தவகை குற்றியலுகரம் எனக் காண்க.
நாக்கு, வகுப்பு
a. வன்தொடர்க் குற்றியலுகரம்
b. இடைத்தொடர்க் குற்றியலுகரம்
c. மென்தொடர்க் குற்றியலுகரம்
d. நெடில் தொடர்க் குற்றியலுகரம்
e. விடைதெரியவில்லை

43. தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி, இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுசேர்த்த பெருமைக்கு உரியவர்.
a. வ.வே.சு ஐயர்
b. தில்லான்
c. முத்துராமலிங்கனார்
d. நேதாஜி
e. விடைதெரியவில்லை

44. கீழ்க்கண்டவற்றுள் "மணநூல்" என அழைக்கப்படுவது எது?
a. மணிமேகலை
b. சீவகசிந்தாமணி
c. கம்பராமாயணம்
d. வளையாபதி
e. விடைதெரியவில்லை

45. இலக்கண குறிப்பு தருக – வெரீஇ
a. சொல்லிசை அளபடை
b. இன்னிசை அளபெடை
c. செய்யுளிசை அளபடை
d. பெயரெச்சம்
e. விடைதெரியவில்லை

46. தவறான இணையைத் தேர்ந்தெடு.
a. புரிசை - மதில்
b. அணங்கு - தெய்வம்
c. பணை - ஓவியம்
d. கயம் - நீர்நிலை
e. விடைதெரியவில்லை

47. எந்த வருடம் ஈ.வெ.ரா வுக்குப் பெரியார் பட்டம் வழங்கப்பட்டது?
a. 1938
b. 1944
c. 1924
d. 1969
e. விடைதெரியவில்லை

48. ஆகுபெயரை காண்க.
கார் அறுத்தான்
a. இடவாகுபெயர்
b. காலவாகுபெயர்
c. பண்பாகுபெயர்
d. கருவியாகுபெயர்
e. விடைதெரியவில்லை

49. தெற்காசியாவின் சாக்ரடீஸ் என அழைக்கப்படுபவர் யார்?
a. அண்ணா
b. பெரியார்
c. காந்தி
d. நேதாஜி
e. விடைதெரியவில்லை

50. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.
குறளில் பயின்று வரும் அணியைக் காண்க.
a. சொல் பின்வருநிலையணி
b. பொருள் பின்வருநிலையணி
c. சொற்பொருள் பின்வருநிலையணி
d. வஞ்சப்புகழ்ச்சியணி
e. விடைதெரியவில்லை

51. தேன்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின் வாயிலாகத் தமிழுணாவை உலகெங்கும் பரப்பியவர்
a. பரிதிமாற்கலைஞர்
b. க. சச்சிதானந்தன்
c. மறைமலையடிகள்
d. பெருஞ்சித்திரனார்
e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

52. பொருத்துக

| தாவரம் | இலைவகை |
|---|---|
| A. நெல், புல் | 1. இலை |
| B. புளி, வேம்பு | 2. தாள் |
| C. சோளம், கரும்பு | 3. தோகை |
| D. தென்னை, பனை | 4. ஓலை |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 2 | 1 | 4 | 3 |
| c. | 2 | 1 | 3 | 4 |
| d. | 3 | 1 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

53. ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது.
a. இரட்டைக்கிளவி b. சிலேடை அணி c. அடுக்குத்தொடர்
d. பழமொழி e. விடை தெரியவில்லை

54. "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" – தொடரில் இடம்பெற்றுள்ள தொழில்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே.
a. பாடிய; கேட்டவர் b. பாடல்; பாடிய c. கேட்டவர், பாடிய
d. பாடல், கேட்டவர் e. விடை தெரியவில்லை

55. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவில் எந்த நூல்களின் பாடல்களை அவர்களது தாய்மொழியில் எழுதி வைத்து பாடுகின்றனர் என தனிநாயகம் அடிகள் கூறுகிறார்?
a. திருமந்திரம், திருக்குறள் b. திருவாசகம், திருக்கோவை
c. திருவெம்பாவை, திருப்பாவை d. திருமந்திரம், திருப்பாவை
e. விடை தெரியவில்லை

56. பொருத்துக.

| | |
|---|---|
| A. நேமி | 1. நற்சொல் |
| B. கோடு | 2. முலை |
| C. விருச்சி | 3. தோள் |
| D. சுவல் | 4. சக்கரம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 1 | 3 |
| b. | 4 | 2 | 1 | 3 |
| c. | 4 | 2 | 3 | 1 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

57. இலக்கணக்குறிப்பு தருக – தடக்கை.
a. உரிச்சொல் தொடர் b. வினைத்தொகை c. பண்புத்தொகை
d. வேற்றுமைத்தொகை e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

58. நன்னன் என்னும் குறுநில மன்னனை பாட்டுடைத் தலைவனாக கொண்ட நூல்.
a. கூத்தராற்றுப்படை b. திருமுருகாற்றுப்படை c. அகநானூறு
d. கலித்தொகை e. விடை தெரியவில்லை

59. தொகா நிலைத்தொடர் எத்தனை வகைப்படும்.
a. 6 b. 8 c. 9 d. 12 e. விடை தெரியவில்லை

60. பின்வருவனவற்றுள் முறையான தொடர்.
a. தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
b. தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
c. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
d. தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.
e. விடை தெரியவில்லை

61. "பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்"
- குறளில் பயின்று வரும் அணியை காண்க.
a. உவமை அணி b. வஞ்சபுகழ்ச்சி அணி
c. எடுத்துக்காட்டு உவமையணி d. பிறிது மொழிதல் அணி
e. விடை தெரியவில்லை

62. "மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா! நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியனே" என்ற வரிகள் யாருடையது?
a. ஆண்டாள் b. குலசேகராழ்வார் c. திருமூலர்
d. அப்பர் e. விடை தெரியவில்லை

63. கீழ்க்கண்டவற்றுள் தவறானது எது?

| சொல்லும் | | பொருளும் |
|---|---|---|
| a. ஊழி | - | யுகம் |
| b. ஊழ் | - | வானம் |
| c. பீடு | - | சிறப்பு |
| d. தண்பெயல் | - | குளிர்ந்த மழை |

e. விடை தெரியவில்லை

64. 'கத்துங் குயிலோசை – சற்றே வந்து
காதிற் பட வேண்டும் இத்தொடரில் இடம்பெற்றுள்ள வழவமைதி.
a. திணைவழுவமைதி b. மரபு வழுவமைதி c. கால வழுவமைதி
d. இட வழுவமைதி e. விடை தெரியவில்லை

65. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணையை தேர்ந்தெடு.

| | | |
|---|---|---|
| a. Nanotechnology | - | மீநுண்தொழில்நுட்பம் |
| b. Space technology | - | விண்வெளித்தொழில்நுட்பம் |
| c. Ultraviolet Rays | - | அகச்சிவப்பு கதிர்கள் |
| d. Cosmic Rays | - | விண்வெளிக் கதிர்கள் |

e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

66. திருவிளையாடற் புராணத்தில் இடம்பெற்றுள்ள "இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம்" எந்த காண்டத்தில் உள்ளது?
a. மதுரை காண்டம்   b. கூடற்காண்டம்   c. தில்லைகாண்டம்
d. திருவாலவாய்க்காண்டம்   e. விடை தெரியவில்லை

67. "ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு" - இப்பாடலில் வரும் பொருள்கோள்.
a. கொண்டுகூட்டுப்பொருள்கோள்   b. நிரல்நிறைப்பொருள்கோள்
c. ஆற்றுநீர் பொருள்கோள்   d. தாப்பிசைப் பொருள்கோள்
e. விடை தெரியவில்லை

68. தேவதுந்துபி எந்த ஆட்டத்திற்கு உரிய இசைக்கருவி.
a. கரகாட்டம்   b. ஒயிலாட்டம்   c. தேவராட்டம்
d. மயிலாட்டம்   e. விடை தெரியவில்லை

69. எந்த பருவத்தை செங்கீரைப் பருவம் என்பர்?
a. 3 - 4 மாதங்கள்   b. 5 – 6 மாதங்கள்   c. 6 – 7 மாதங்கள்
d. 8 - 9 மாதங்கள்   e. விடை தெரியவில்லை

70. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாதைத் தேர்ந்தெடு.
a. சப்பாணி   b. முத்தம்   c. வருகை
d. கழங்கு   e. விடை தெரியவில்லை

71. "ஓங்கு இரும் பரப்பின்
வங்க ஈட்டத்து தொண்டி யோர்" – எந்த பாடல் இடம்பெற்றுள்ள நூல்?
a. இராமாயணம்   b. சிலப்பதிகாரம்   c. சீவகசிந்தாமணி
d. புறநானூறு   e. விடை தெரியவில்லை

72. "விசாரணைக் கமிஷன்" எனும் புதினத்திற்கு சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றவர்.
a. சா. கந்தசாமி   b. கமலாலயன்   c. கு. அழகிரிசாமி
d. நாகூர்ரூமி   e. விடை தெரியவில்லை

73. கீழ்க்கண்டவற்றுள் சரியானவற்றை தேர்ந்தெடு
a. மருளி - சலிப்பு
b. சடைத்து புளித்து - சோற்றுக்கஞ்சி
c. பாச்சல் - புதியவன்
d. நீத்துப்பாகம் - மேல்கஞ்சி
e. விடை தெரியவில்லை

74. புன்னை, ஞாழல் எந்த நிலத்திற்குரிய மரம்.
a. குறிஞ்சி   b. முல்லை   c. மருதம்
d. நெய்தல்   e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

75. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள் எந்த மரபைச் சேர்ந்தவர்?
a. சோழர் b. பாண்டியர் c. சேரர்
d. பல்லவர் e. விடை தெரியவில்லை

76. 1974ல் நோபல் பரிசுக்கு இணையான மகசேச விருது பெற்றவர்.
a. எம்.எஸ். சுப்புலட்சுமி b. பாலசரஸ்வதி c. ராஜம் கிருஷ்ணன்
d. சின்னப்பிள்ளை e. விடை தெரியவில்லை

77. ‘‘உழுபவருக்கே நில உரிமை இயக்கம்’’ தொடங்கி வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறு பணிகள் மூலம் வருமானம் வர ஏற்பாடு செய்தவர்?
a. சின்னப்பிள்ளை b. கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் c. ராஜம் கிருஷ்ணன்
d. பாலசரஸ்வதி e. விடை தெரியவில்லை

78. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்.
a. நாட்டைக்கைப்பற்றல் b. ஆநிரை கவர்தல்
c. வலிமையை நிலைநாட்டல் d. கோட்டையை முற்றுகையிடல்
e. விடை தெரியவில்லை

79. ‘உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்’’ என்று கூறியவர்?
a. ஔவையார் b. நச்செள்ளையார் c. கபிலர்
d. நல்வேட்டனார் e. விடை தெரியவில்லை

80. ‘‘மாற்றம் எனது மானிதத் தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்’’
என்ற பாடலை எழுதியவர்?
a. கண்ணதாசன் b. பாரதிதாசன் c. பாரதியார்
d. வாணிதாசன் e. விடை தெரியவில்லை

81. பொருத்துக.
A. நேர் நிரை நேர் 1. கூவிளங்கனி
B. நிரை நேர் நிரை 2. கருவிளங்கனி
C. நிரை நிரை நிரை 3. புளிமாங்கனி
D. நேர் நிரை நிரை 4. தேமாங்கனி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 4 | 2 |
| b. | 1 | 2 | 3 | 4 |
| c. | 4 | 1 | 2 | 3 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

82. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாலினம்
a. அகவற்பா b. வெண்பா c. வஞ்சிப்பா
d. கலிப்பா e. விடை தெரியவில்லை

APOLLO STUDY CENTRE

83. பின்வருபவர்களுள் ''அருளப்பன்'' என அழைக்கப்படுவர்?
a. திருமுழுக்கு யோவான் b. ஜோசப் c. யேசுநாதர்
d. வீரமாமுனிவர் e. விடை தெரியவில்லை

84. கீழ்க்காணுபவைகளில் ''வினைத்தொகைகள் அல்லாததை தேர்ந்தெடு.
1. உய்முறை 2. செய்முறை 3. மெய்முறை 4. காய்மணி
a. 1, 3, 4 b. 1, 2, 3 c. 1, 2, 4 d. 2, 3, 4 e. விடை தெரியவில்லை

85. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது.
a. அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
b. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
c. அறிவியல் முன்னேற்றம்
d. வெளிநாட்டு முதலீடுகள்
e. விடை தெரியவில்லை

86. தவறான இணையைத் தேர்ந்தெடு.
a. யானை சவாரி - பாவண்ணன்
b. கல்மரம் - திலகவதி
c. குட்டிஇளவரசன் - வெ. ஸ்ரீராம்
d. அதோ அந்தப் பறவைப் போல - எஸ். ராமகிருஷ்ணன்
e. விடை தெரியவில்லை

87. தீவக அணி எத்தனை வகையாக வரும்?
a. 2 b. 3 c. 4 d. 6 e. விடை தெரியவில்லை

88. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது
- இக்குறளில் பயின்று வரும் அணி?
a. தன்மையணி b. தற்குறிப்பேற்ற அணி c. தீவகஅணி
d. நிரல்நிறை அணி e. விடை தெரியவில்லை

89. ராஜம் கிருஷ்ணன் அவர்கள், பெண் குழந்தைக் கொலைக்கான காரணங்களை ஆராய்ந்து எழுதிய நூல் எது?
a. சேற்றில் மனிதர்கள் b. கூட்டுக்குஞ்சிகள்
c. மண்ணகத்துப் பூந்துளிகள் d. அலைவாய்க்கரையில்
e. விடை தெரியவில்லை

90. நாகூர் ரூமியின் இயற்பெயர் என்ன?
a. முகம்மது சூ.ஃபி b. முகம்மது அலி c. முகம்மது ர.ஃபி
d. முகம்மது பாசல் e. விடை தெரியவில்லை

91. கீழ்க்கண்டவற்றுள் எது வெளிப்படை விடைகள் கிடையாது?
a. சுட்டுவிடை b. மறைவிடை c. நேர்விடை
d. ஏவல் விடை e. விடைதெரியவில்லை

APOLLO STUDY CENTRE

92. இலக்கண குறிப்பு தருக.
சிவப்புச் சட்டை பேசினார்
a. பண்புத்தொகை b. வினைத்தொகை c. அன்மொழித்தொகை
d. உவமைத்தொகை e. விடைதெரியவில்லை

93. வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நூல் எது?
a. நறுந்தொகை b. அகநானூறு c. புறநானூறு
d. அழகின் சிரிப்பு e. விடைதெரியவில்லை

94. பெருமாள் திருமொழியைப் பாடியவர்
a. ஆண்டாள் b. குலசேகர ஆழ்வார் c. அப்பர்
d. மாணிக்கவாசகர் e. விடைதெரியவில்லை

95. பரிபாடலில் கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை
a. 24 b. 70 c. 5 d. 81 e. விடைதெரியவில்லை

96. ‘‘செழியன் வந்தான்’’ – என்பது
a. திணை வழாநிலை b. பால் வழாநிலை c. இட வழாநிலை
d. கால வழாநிலை e. விடைதெரியவில்லை

97. ‘‘நீ விளையாடவில்லையா?’’ என்ற வினாவிற்கு ‘‘கால் வலிக்கிறது’’ என்று விடையளிப்பது.
a. உறுவது கூறல் விடை b. இனமொழிவிடை
c. உற்றது உரைத்தல் விடை d. வினா எதிர் வினாதல் விடை
e. விடைதெரியவில்லை

98. பிரித்தெழுதுக அருந்துணை.
a. அருமை + துணை b. அரு + துணை c. அருமை + இணை
d. அரு + இணை e. விடைதெரியவில்லை

99. கீழ்க்கண்டவற்றுள் தலையில் அணியும் அணிகலன் எது?
a. அரைநாண் b. குழை c. சுட்டி
d. சூழி e. விடைதெரியவில்லை

100. ‘‘வைகறை’’ எத்திணைக்குரிய சிறுபொழுது.
a. குறிஞ்சி b. முல்லை c. மருதம்
d. நெய்தல் e. விடைதெரியவில்லை

APOLLO STUDY CENTRE